# லூர்து - தியானம் - 2026

## “அருள்நிறைந்தவரே, வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்”

## முன்னுரை

### 1. மங்களவார்த்தை சித்திரம் (ஓவியம்)

அ. “வாழ்க மரியே” (லூக் 1:28அ)

ஆ. “அருள்மிகப் பெற்றவரே” (லூக் 1:28ஆ)

இ. “ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” (லூக் 1:28இ)

ஈ. அறிவிப்பின் இதயம் (அடிநாதம்) (லூக் 1:29-37)

உ. மரியாவின் சம்மதம் (ஒப்புதல், அர்ப்பணம்) (லூக் 1:38)

### 2. மேய்ப்புப்பணிக்கான சில சிந்தனைகள்

அ. லூர்து: நற்செய்தி மகிழ்ச்சியின் இடம்

ஆ. லூர்து: அருளை புலன்களால் சந்திக்கும் இடம் (உடலளவில் கண்டடையும் இடம்)

இ, லூர்து: விண்ணகத்தால் அரவணைக்கப்பட்ட இடம் (சூழப்பட்ட), புலப்படும் (காணக்கூடிய) திருத்தூயகம்

ஈ. தீர்மானிக்கும் வார்த்தைகள்: இதோ, வருகிறேன், எனக்கு நிகழட்டும்…

உ. பெர்னதெத்தின் ஆர்வம் (விருப்பம்)

## முடிவுரை

அருள்திரு. நிக்கோலா வென்றிக்லியா, முஆஜ

அருள்திரு. கியுசெப் செரிபெலி, ஊீ

# முன்னுரை

## அன்னை மரியாவோடு மூன்றாண்டுப் பயணம்

வரும் மூன்றாண்டுகளில் லூர்து நகர் திருத்தலமானது ஓர் ஆன்மீகத் திருப்பயணத்தை மேற்கொள்ள நம்மை அழைக்கிறது. கன்னி மரியாவுடைய வாழ்வில் நடந்த நிகழ்வுகளின் இதயத்திற்குள் நுழைவதே அப்பயணமாகும். லூக்கா நற்செய்தியின் ஒளியில் அப்பயணத்தை நாம் படிப்படியாக மேற்கொள்வோம்.

### நமது பயணம், நமது எதிர்நோக்கு

#### 2026: மங்கள வார்த்தை நிகழ்வு:

“அருள்மிகப் பெற்றவரே, வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” (லூக் 1:28)

இந்த ஆண்டானது, அனைத்தையும் மாற்றிய “ஆம்” என்னும் அன்னை மரியாவின் பதிலை வரவேற்று, அதற்கு செவிமடுக்கும் ஆண்டாகும்.

#### 2027: அன்னை மரியா எலிசபெத்தை சந்தித்தல்:

“அந்நாட்களில் மரியா புறப்பட்டு… விரைந்து சென்றார்…” (லூக் 1:39)

இந்த ஆண்டானது, பிறரைத் தேடிச் சென்று மகிழ்ச்சிக்குரிய பிறரன்பு செயல்களில் ஈடுபடும் சேவை ஆண்டாகும்.

#### 2028: மரியாவின் பாடல்:

“அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்” (லூக் 1:50).

இந்த ஆண்டானது, ஆண்டவர் செய்த அரும்பெரும் செயல்களை உளமாற உணர்ந்து (நினைவுகூர்ந்து), இறைபுகழ்ச்சியுடன் நன்றிப்பண் பாடும் ஆண்டாகும்.

இந்த ஆண்டு நமது சாகசத்தின் தொடக்கத்தில் இருக்கிறோம்…

மங்கள வார்த்தை நிகழ்வானது நம்மை வழிநடத்தட்டும்.

இறைத்திருவுளத்திற்குத் தொடக்கத்திலேயே தன்னை முழுமையாக அரப்பபணித்த அன்னை மரியாவின் கற்பனைக்கெட்டாத நம்பிக்கைச் சாகசப் பயணத்தில் அவரைப் பின்தொடர்ந்து செல்வதே நமது நோக்கமாகும்.

நாசரேத்து இல்லத்தில் அவரோடு இணைவோம்! இறைவார்த்தைக்கு நமது இதயங்களைத் திறந்து வைப்போம். (இறைவார்த்தைக்குத் திறந்த இதயத்தோடு செவிமடுப்போம்)

## ஃப்ரா ஆஞ்சலிக்கோவின் அமைதி (மௌனம்)

மங்கள வார்த்தை நிகழ்வு குறித்த அருளாளர் ப்ரா ஆஞ்சலிக்கோவின் உன்னதமான சித்திரத்தை அறியாதவர் யார்? (யாராவது இருக்கக் கூடுமோ?)

## அதிதூதரான புனித கபிரியேல்

புனித கபிரியேல் அதிதூதர் புயலைப் போல் வரவில்லை. கிட்டத்தட்ட முழந்தாள்படியிட்டு வணங்குகிறார். அவரது வியக்கத்தக்க சிறகுகள் மரியாதையின் நிமித்தம் மடக்கப்படுகின்றன. அவரது திருக்கரம் சுட்டிக்காட்டுகிறதேயன்றி, எதையும் திணிக்கவில்லை. அவர் கொண்டுவந்த ஒளி வெளிப்படுத்தியதே தவிர, திகைப்பூட்டவில்லை (கண்களுக்குக் கூச்சமூட்டவில்லை).

## புனித கன்னி மரியா

சாதாரண (எளிமையான) இருக்கையில் அமர்ந்திருக்கும் அன்னை மரியா, தாழ்ச்சியின் அடையாளமாத் திகழ்கிறார். தன் இரு கரங்களையும் மார்பின் மீது குறுக்காக வைத்திருக்கிறார். இச்செய்கையானது, உள்ளார்ந்த பாதுகாப்பு மற்றும் வரவேற்பின் அடையாளமாகும். அவரது கூரிய பார்வை வானதூதரை நோக்கி மட்டுமல்ல, வானதூதரின் உள்ளும் ஊடுருவிச் செல்கிறது. இச்செயலானது, இறைவார்த்தையைத் தியானிக்கும் இதயத்தின் கனிதரும் அமைதியாகும். இது இருப்பை (இருத்தல்) வெளிப்படுத்தும் அடர்த்திமிகு (பொருள்நிறைந்த) அமைதியாகும்.

## சாகசத்தின் விடியல் (தோற்றம்)

மங்கள வார்த்தை நிகழ்வு ஒரு தொலைதூர நிகழ்வு அல்ல (எங்கோ நடந்த ஒன்றல்ல). அது நம்பிக்கையின் ஒவ்வொரு தொடக்கத்தையும் குறித்துக் காட்டும் உருவகமாகும். அக்குறிப்பிட்ட தருணத்தில், அன்னை மரியா எதிர்காலத்தில் நடக்கப்போவதை (எதிர்காலத்தை) அறிந்திருக்கவில்லை. எதிர்காலம் குறித்த அனைத்து விவரங்களையும் (விடயங்களையும்) உள்ளடக்கிய வரைபடம் எதுவும் அவரிடம் இல்லை. எகிப்திற்கு ஓடிப்போவது குறித்தோ அல்லது சிலுவையின் இருள் குறித்தோ எந்த சிந்தனையும் அவரிடம் இல்லை. அப்படியானால், அவரிடம் என்னதான் இருந்தது?

- ஆழமான உள்ளார்ந்த விருப்பம்
- இறைபிரச்சன்னத்தால் ஆட்கொள்ளப்பட்ட சலனமற்ற நிலை (நிசப்தம்)
- தகுதியற்ற தெய்வீகப் பரிசு (அருள்கொடை), அதாவது, அருள்.

## நமது திருப்பயணம்: "ஆம்" என்னும் நமது பதிலின் நுழைவாயில்

லூர்து நகரில் நம்மைக் குறித்து என்ன சொல்வது? நமது திருப்பயணம் இத்தருணத்தை எதிரொலிக்கிறது. நமக்கு என்ன நிகழப்போகிறது என்பதை அறியாமல், பல்வேறு கேள்விகள், எதிர்பார்ப்புகள், துன்பங்களோடுதான் நாம் இங்கே வருகிறோம். விண்ணகம் மண்ணகத்தை வந்தடையும் இங்குதான், இந்த இடத்தில்தான் உள்ளார்ந்த விடியல் தோன்றுகிறது:

- மனமாற்றத்தின் அமைதியான தொடக்கம்
- எதிர்பாரா குணம்பெறுதலை நோக்கிய முதல் அடி (நகர்வு)
- தூக்க (செயலற்ற) நிலையிலிருந்த நம்பிக்கை விழிப்படைதல்
- நமது இதயத்தில் நமது அழைப்பைக் குறித்த கிசுகிசுப்பை உணர்தல்

# 1 - மங்களவார்த்தைச் சித்திரம் (ஓவியம்)

## 1. “வாழ்க!” (லூக் 1:28அ) கிரேக்கம்: காய்ரே

அன்னை மரியாவுக்குச் சொல்லப்பட்ட முதல் இறைவார்த்தை சாதாரண வாழ்த்தல்ல. அது “வாழ்க” என்னும் மகிழ்ச்சியான கட்டளை.

- இவ்வாழ்த்தானது, எதிர்நோக்கிக் காத்திருந்த காலத்தின் நிறைவை அறிவித்த இறைவாக்கினர்களின் அழைப்பை எதிரொலிக்கிறது. இவ்வார்த்தையின் மூலம் வாக்குறுதி நிறைவேறிவிட்டது என்பதை வானதூதர் மரியாவுக்கு வெளிப்படுத்துகிறார். நாசரேத்து இளம் பெண்ணாக இருந்த அவர், இறுதியாக இப்பொழுது தனது மீட்பரை வரவேற்கும் ஒட்டுமொத்த மானிட இனத்தின் முகமான “சீயோன்” மகளாக மாறுகிறார்.
- மரியாவின் வழியாக கடவுளின் மகிழ்ச்சி பூமியில் குடிகொள்ள வருகிறது.

## 2. அருள் நிறைந்தவர்” (லூக் 1:28ஆ) கிரேக்கம்: கெக்கரித்தோமெ

வானதூதர் ஒரு குணத்தை (பண்பை, தரத்தை, சிறப்பை, இயல்பை) வழங்கவில்லை. ஆனால், கடவுளின் பார்வையில், அவருக்கிருந்த ஏற்கனவேயிருந்த “அருள் நிறைந்தவர்” என்னும் அவரது உண்மையான பெயரைத்தான் வெளிப்படுத்துகிறார். திருவிவிலியத்தில் இது இவ்வார்த்தை தனித்துவமானது. இச்சொல் அவரை ஆழமாகத் திகிலுறச் (திகைப்படையச்) செய்கிறது.

- இந்த கிரேக்கச் சொல்லானது, கடவுள் மரியாமீது கொண்டிருந்த அன்பின் முழு வரலாற்றையும் நமக்கு எடுத்துரைக்கிறது. அதாவது, கடந்த காலத்தில் மரியா கடவுளின் அன்பால் நிறைந்திருந்தார் என்பதும், இந்த அருளின் நிலையிலேயே அவர் என்றென்றும் நிலைத்திருப்பார் என்பதும் இதன் பொருளாகும்.
- இது தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்ட அருள்கொடை அல்ல. அவரது வாழ்நாளின் முதல் தருணத்திலிருந்தே அவருக்கு கடவுளால் அருளப்பட்ட நிறைவான கொடையாகும். இதுவே அவரது இருப்பின்

சாராம்சம். திருத்தந்தை யோவான் பவுல் இதனை, “அருள்நிறைந்தவர் என்பது கடவுளின் பார்வையில் மரியாவின் பெயர்” என்று குறிப்பிடுகிறார்.

## 3. “ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” (லூக் 1:28இ) ஹொ குரியோஸ் மெட்டா சூ

இவ்வார்த்தைகள் மரியாவின் மகிழ்ச்சியின் ஊற்றாகும். இவை சாதாரண அறிக்கை அல்ல. இவை திருவிவிலியம் முழுவதும் இழையோடியிருக்கும் வாக்குறுதியாகும். பலவீனமான நமது இதயத்தில் கடவுளின் ஆற்றல் செயலாற்றுகிறது என்பதே அவ்வாக்குறுதியாகும்.

மரியாவைப் பொறுத்தவரையில். இவ்வாக்குறுதி தனித்துவமான மாபெரும் பொருளைத் தருகிறது. ஆண்டவர் அவர் அருகாமையில் மட்டுமல்ல, அவரில் மனுவுரு எடுக்கிறார். இவ்வாறு அவர் புதிய உடன்படிக்கைப் பேழையாகிறார்.

- முற்காலத்தில், கட்டளைகள் அடங்கிய கற்பலகை பேழையினுள் இருந்தது. மரியாவோ உயிருள்ள கட்டளையை தனது உதரத்தில் ஏங்கிச் செல்கிறார்.
- முற்காலத்தில் மாட்சியின் மேகம் பேழையை மூடியது. இப்பொழுது தூய ஆவியார் மரியாமீது நிழலிடுகிறார். பூமியில் கடவுள் வாழும் உயிருள்ள தங்குமிடமாக மரியா திகழ்கிறார்.

## 4. அறிவிப்பின் இதயம் (அடிநாதம்) (லூக் 1:29-37)

மங்கள வார்த்தை நிகழ்வு வெறுமனே ஓர் உரையாடல் அல்ல. மூவொரு கடவுளும் தன்னை வெளிப்படுத்தி, மனுக்குல மீட்புக்காக செயலாற்றுவதை எடுத்துரைக்கும் கடவுளின் தலைச் சிறந்த செயலாகும்.

### 1) தந்தை: அன்பின் ஆசிரியர் (ஊற்று, மூலம்)

அனைத்தும் கடவுளின் செயலிலிருந்தே தொடங்குகிறது. கடவுள் மரியாவைத் தேர்ந்தெடுத்தது அவரது அன்புப் பார்வையினால்தான். அத்தேர்வு மரியாவின் தகுதிகளின் அடிப்படையிலானது அல்ல. மாறாக, அவரது இதயத்தில் நிறைந்திருந்த அருளால் மட்டுமே நிகழ்ந்ததாகும். “இதோ! கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்” என்னும் வானதூதரின் வாழ்த்தானது, இலவசமாகவே அந்த அழைப்பானது கொடுக்கப்பட்டது என்பதையும், அது மனித பதிலிறுப்பை முந்தியது என்பதையும், அதுதான் இறைத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கான ஆற்றலையும் தருகிறது என்பதையும் எண்பிக்கிறது.

### 2) மகன்: மறைபொருளின் இதயம்

மகனாகிய இயேசுவைக் குறித்த வெளிப்பாடே அறிவிப்பின் இதயமாகத் திகழ்கிறது. “இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்” என்னும் அறிவிப்பே வரலாற்றை மாற்றுகிறது: நமது மனித இயல்பில் பங்குகொள்ள கடவுள் மனிதனாகப் பிறக்கிறார். “இயேசு” என்னும் அவரது பெயர் “கடவுள் மீட்கிறார்” என்னும் அவரது பணியைச் சுட்டிக் காட்டுகிறது. அவர் மீட்பு மற்றும் ஒப்புரவின் உயிருள்ள வாக்குறுதியாகத் திகழ்கிறார்.

### 3) தூய ஆவியார்: படைக்கும் ஆற்றல்

தூய ஆவியாரின் ஆற்றல் சாத்தியமற்றதையும் நிகழச் செய்கிறது. அவரே மரியாவின் மீது நிழலிட்டு, அவரைக் கடவுளின் தாயாக மாற்றுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கை நமது முயற்சிகளைச் சார்ந்ததவை அல்ல, மாறாக, அருளால் உருமாற்றம் அடைவதற்கு நம்மை அனுமதிக்கும் நமது திறனைப் பொறுத்தது என்பதை தூய ஆவியாரின் இச்செயல் நமக்குக் கற்றுத் தருகிறது. தூய ஆவியார் நம்மைத் தூண்டியெழுப்புவதோடு மட்டுமல்லாமல், நமக்குள்ளிருந்து நம்மை மறுபடைப்பாக்குகிறார் (மீண்டும் படைக்கிறார்).

## 5. மரியாவின் ஒப்புதல் (சம்மதம்) (லூக் 1:38): வரலாற்றை மாற்றும் "ஆகட்டும்" என்னும் பதில்

கடவுளின் திட்டத்தில் மனிதருடைய பதிலும் எதிர்பார்க்கப்படுகிறது. "ஓ கன்னியே! விரைந்து பதிலளிப்பாய். மண்ணகமும் நரகமும் விண்ணகமும் எதிர்பார்த்திருக்கும் வார்த்தையை சொல்லிவிடு" என்று மாபெரும் புனிதரான பெர்னார்டு மரியாவை நோக்கி வேண்டுகிறார்.

"இதோ உமது அடிமை! உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்னும் அன்னை மரியாவின் பதில்தான் இந்நிகழ்வின் இதயமாகும். அதனுடைய வளமை மூன்று நிலைகளில் பாராட்டுக்குரியது.

### 1) "இதோ நானிருக்கிறேன்": ஒரு முழுமையான விருப்பம்.

இது சாதாரணமான "இதோ இருக்கிறேன்" என்பதல்ல. செயலூக்கத்துடனும் முழுமையாகவும் எந்தவிதமான தயக்கமுமின்றி கடவுளின் பணிக்காகத் தன்னை அர்ப்பணிப்பதாக அறிக்கையிடும் ஓர் இதயத்தின் வெளிப்பாடாகும்.

### 2) "அடிமை": கடவுளை நோக்கிச் செல்லும் பாதையைத் திறந்துவிடும் தாழ்ச்சி

"அடிமை" என்று தன்னை அங்கிகரிப்பதன் மூலம், ஒருவர் தனது முக்கியமின்மையை அறிக்கையிடுவதோடு, கடவுளின் மகத்துவமே செயலாற்ற முடியும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறார். தன்னைக் குறித்த அனைத்தையும் விட்டுவிட்டு, எல்லாம் வல்லவர் சுதந்திரமாக செயல்பட தன்னைக் கையளிப்பதே இதன் பொருளாகும்.

### 3) "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்": முழுமையான நம்பிக்கை

இதுவே நம்பிக்கையின் உச்சம் ஆகும். தான் புரிந்துகொள்வதற்கான விளக்கம் எதனையும் மரியா கேட்கவில்லை. மாறாக, வல்லமையும் உண்மையும் நிறைந்தவரிடம் தன்னை ஒப்படைக்கிறார். இது மனித அறிவிற்கு அப்பாற்பட்டதாயினும் கடவுளின் வாக்குறுதியோடு இணைந்து பயணிக்க நினைக்கும் மரியாவின் விருப்பத்தையும் கடவுளில் வைத்துள்ள முழுமையான நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் செயலாகும்.

"ஆகட்டும்" என்னும் பதிலானது அவரது முழுமையான சுதந்திரம் மற்றும் நிபந்தனையற்ற நம்பிக்கையின் செயலாகும்.

"ஓ மரியே! நாங்கள் உம்மை உற்று நோக்குகிறோம்,

உமக்கு நன்றி சொல்கிறோம்.

ஏனெனில், "இதோ ஆண்டவரின் அடிமை!

உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்னும்

தாழ்ச்சியும் வீரமும் நிறைந்த உமது பதிலால்

கடவுள் மனுவுரு எடுக்க நீர் அனுமதித்தீர்.

ஓ மரியே! நாங்களும் அன்றாட வாழ்க்கையில்,

கடவுளின் விருப்பத்திற்கு "ஆகட்டும்" என்ற

தாழ்ச்சியுள்ள வலிமையான பதிலைச் சொல்வோமாக!

இதனால், உமது மகனின் வல்லமையாலும்

தூய ஆவியாரின் செயலாலும்,

எங்களது எளிய வாழ்வு

கடவுள் குடியிருக்கும் இடமாகவும்

அனைவருடைய மீட்புக்கான கருவியாகவும் மாறுவதாக!"

திருத்தந்தை புனித ஆறாம் பவுல்

மங்கள வார்த்தைச் செபம், மார்ச் 25, 1975.

# 2 - மேய்ப்புப்பணிக்கான சில சிந்தனைகள்

## 1) லூர்து: நற்செய்தி மகிழ்ச்சியின் இடம்

மரியாவிடம் சொல்லப்பட்ட கடவுளின் முதல் வார்த்தைகள் "மகிழ்ச்சியோடிரு!" என்னும் வாழ்த்துச் செய்தியே. இது ஏதோ ஒன்றை செய்யப் பணிக்கும் கட்டளை அல்ல. மாறாக, மகிழ்ச்சி தரும் (இறை)பிரசன்னத்தை வரவேற்க அழைப்பு விடுப்பதாகும். மரியாவின் எடுத்துக்காட்டானது, எப்பொழுதும் நெருக்கமாக உடனிருப்பதாக வெளிப்படுத்திய கடவுளின் மீது அவர் கொண்டிருந்த மகிழ்ச்சிநிறை நம்பிக்கையையும், அந்நம்பிக்கையிலிருந்த அனைத்து தூய்மையினையும் நமக்கு நினைவூட்டுகிறது.

- **மரியா – மகிழ்ச்சியான நம்பிக்கையின் உருவகம் (அடையாளம்)**

அழைப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம், மரியா அனைத்து மகிழ்ச்சிநிறை நம்பிக்கையாளர்களின் உருவகமாகத் திகழ்கிறார். அவரது நம்பிக்கை என்பது, தன்னை அன்பாகவும் முழுவதும் நம்பத்தக்கவராவும் வெளிப்படுத்திய கடவுளுக்கு, அவர் தரும் மகிழ்ச்சிநிறை வரவேற்புப் பதிலாகும். இதுவே அவரது பாடலில் வெளிப்படுகிறது.

- **குகை: மகிழ்ச்சி துயரத்தைச் சந்திக்கிறது (மகிழ்ச்சியும் துயரமும் சந்திக்கும் இடம்)**

கடவுளில் கொண்டிருக்கும் இம்மகிழ்ச்சி என்பது வலிகளில்லா வாழ்க்கையைக் குறிப்பதல்ல என்பதை லூர்து நகரின் இதயமாக அமைந்துள்ள மசபியேல் குகையானது நமக்குச் சுட்டிக், காட்டுகிறது. மாறாக, அது பலவீனமான இதயங்களை ஆற்றுப்படுத்தி, சோதனைகளுக்கு மத்தியிலும் எதிர்நோக்கை விளைவித்து, நம்பிக்கைக்கான கதவினை திறந்து வைத்து, துயரத்தைக்கூட மாற்றியமைக்கும் பிரசன்னமாகும்.

- **திருப்பயணம்: மகிழ்ச்சியினை மீண்டும் கண்டறிதல் (மீட்டெடுத்தல்)**

இலட்சக்கணக்கான (கோடிக்கணக்கான, எண்ணிக்கையில்லா) திருப்பயணிகள் தங்களது சுமைகளோடு (பாரங்களோடு) இங்கு வருகிறார்கள். லூர்து நகர் அனுபவம் என்பது நம்பிக்கையின் உண்மையான மகிழ்ச்சியை மீண்டும் கண்டுபிடிப்பதற்கான அழைப்பாகும். அது மேலோட்டமான மகிழ்ச்சி அல்ல. மாறாக, அது மரியாவின் தாய்மைப் பிரசன்னத்தின் வழியாக, கடவுளை எதிர்கொள்ளும் உயிரோட்டமுள்ள சந்திப்பிலிருந்து ஊற்றெடுக்கும் ஆழமான மகிச்சியாகும்.

- **நமது பணி: மகிழ்ச்சியை வளர்த்தெடுப்பது**

உள்ளார்ந்த மகிழ்ச்சியின் ஊற்றினை கண்டறிய, அனைவருக்கும் உதவுவதே நமது மேய்ப்புப்பணிக் கடமையாகும். அம்மகிழ்சியானது நமது முயற்சிகளிலிருந்து பிறப்பதில்லை. மாறாக, நாம் எப்பொழுதும் தனித்திருப்பதில்லை (தனித்துவிடப்படுவதில்லை) என்னும் உறுதிப்பாட்டிலிருந்து ஊற்றெடுப்பதாகும். மரியா எப்பொழுதும் அன்போடு நம்மோடிருக்கிறார் என்னும் ஆழமான உணர்வே, சோதனைகளுக்கு மத்தியிலும்கூட எதிர்நோக்கையும் மனஅமைதியையும் தரும் சக்தியாகத் திகழ்கிறது.

## 2) லூர்து: அருளை உடலளவில் சந்திக்கும் இடம்

லூர்து நகரில் நாம் ஓர் அடிப்படை உண்மையைக் கண்டறிகிறோம். கடவுளின் அருள் நமக்கு முந்தியது (கடவுளின் அருளே முதல் அடியை எடுத்துவைக்கிறது) என்பதே அவ்வுண்மை. மரியாவைப் போல, நாமும் அருளால்

நிறைக்கப்படுகிறோம். அது நமது தகுதிகளின் அடிப்படையில் அல்ல. மாறாக, கடவுள் நம்மை முதலில் அன்பு செய்கிறார். அப்படியெனில், புனிதம் என்பது ஒரு போராட்டம் அல்ல. மாறாக, நம்பிக்கையோடு அவ்வன்பிற்கு நம்மை கையளிப்பதாகும் (நாம் சரணடைவதாகும்).

அருள் என்பது காணமுடியாத சிந்தனை அல்ல (அடைய முடியாததல்ல), மாறாக, நடைமுறை வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் செயல்பட்டு தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் உயிருள்ள சக்தியாகும்:

- சுகம் பெறுதல் (குணமளித்தல்): குறிப்பாக, இதய நோய்களிலிருந்து குணம் பெறுதல்: காயங்கள் குணமாகின்றன. பயங்கள் மறைந்து போகின்றன.
- மனமாற்றங்கள்: இவை புதிய தொடக்கத்திற்கான வெளிச்சத்தைக் கொண்டு வருகின்றன.
- ஒப்புரவுகள்: இவைகள் மூலம், கடந்த கால அழுத்தங்களிலிருந்து (பாரங்களிலிருந்து) மன்னிப்பின் மூலம் நாம் விடுவிக்கப்படுகிறோம்.
- குகையிலுள்ள நீர் இவ்வருளிற்கான சக்திவாய்ந்த அடையாளமாகும். அதில் எந்தவிதமான மாய மந்திர சக்திகளும் இல்லை. ஆனால், அந்நீரானது நமது பார்வைக்கு அப்பாற்பட்ட உலகத்தோடு நம்மை இணைக்கும் காணக்கூடிய அடையாளமாகத் திகழ்கிறது. அது நம்மைக் கழுவுகின்ற, தூய்மைப்படுத்துகின்ற, அமைதி மற்றும் அர்த்தத்தைத் தேடும் நமது ஆழமான தாகத்தைத் தணிக்கின்ற அருளாகும்.

லூர்து அனுபவம் என்பது, இந்த முழுமையை நோக்கி நமது இதயக் கதவுகளைத் திறந்துவைக்க கற்றுக்கொள்வதாகும். ஒப்புரவு மற்றும் நற்கருணை போன்ற அருளடையாளக் கொண்டாட்டங்களில் பங்கெடுப்பது இதற்கான சிறந்த வழியாகும். அனைத்திற்கும் மேலாக, நம்பிக்கையோடு தன்னைக் கையளிக்கும் உணர்வாகும். அதாவது, கடவுள் நம்மில் செயலாற்றுவதைத் தடுக்கும் எதிர்ப்பு மனநிலைக்குப் பதிலாக, அவரது அன்புக்குச் சாட்சிகளாக மாறுவதாகும்.

## 3) லூர்து: விண்ணகத்தால் அரவணைக்கப்படும் (சூழப்படும்) இடம், உடல் இருப்பின் (பிரசன்னத்தின்) திருத்தூயகம்

லூர்து நகரின் மிக உன்னதாமான அனுபவம் என்பது இருப்பைக் (பிரசன்னத்தைக்) குறித்ததாகும். ஏறக்குறைய அதனை உடலளவில், விண்ணத்தையும் மண்ணகத்தையும் பிரிக்கின்ற திரையானது விலக்கப்பட்டதாக உணர்வதாகும். மரியாவின் மென்மையின் வழியாக தன்னை வெளிப்படுத்தும் கடவுள் உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், அவர் உங்களுக்கு செவிமடுத்துக் கொண்டிருப்பதாகவும், அவரால் நீங்கள் தனிப்பட்ட விதத்தில் அன்பு செய்யப்படுவதாகவும் உணருகிறீர்கள். இப்பிரசன்னமானது, இறைவேண்டல் செய்யும் மக்களிடத்திலும் நோயுற்றவர்களின் முகத்திலும் காணக்கூடிய விதத்தில் (புலப்படும் வகையில்) தன்னை வெளிப்படுத்துகிறது.

இருப்பினும், லூர்து கெபியானது, ஒரு முக்கியமான காட்சிவழி மறைக்கல்வியை நமக்கு வழங்குகிறது. அன்னை மரியாவின் திருவுருவத்தை நோக்கி நமது பார்வையை செலுத்தும்போது, திருப்பீடமும் திருச்சிலுவையும்தான் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. இது மரியாவின் பணியை நமக்கு நினைவூட்டுகிறது:

- மரியா வழி மட்டுமே, இலக்கு அல்ல. நம்மை வரவேற்கும் நிறைவான வழிகாட்டி அவர். இயேசுவிடம் நம்மை அழைத்துச் செல்வதே அவரது பணியாகும்.
- அவர் கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்துகிறார். லூர்து நகரில் அவர் எழுந்தருளியிருப்பதன் நோக்கம் ஒன்று மட்டுமே: நமது அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலும் மறைவாக் காணப்படும் அவரது மகனைக் கண்டுணர, நமக்கு உதவி புரிய, நம்மைக் கரம்பிடித்து அழைத்துச் செல்வதே அவரது பணியாகும். கானாவூர் திருமண விருந்திலும் இதே செய்தியைத்தான் அவர் வழங்கினார். அது நம்பிக்கை கொள்ள, காலங்களைக் கடந்து, என்றென்றும் விடுக்கப்படும் "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்னும் அழைப்பாகும்.

## 4) தீர்க்கமான (தீர்மானிக்கும்) வார்த்தைகள்: "இதோ உமது அடிமை. உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்"

விண்ணகம் மண்ணகத்தைத் தொடுவதற்கு, ஒரு சுதந்திரமான, முழுமையான மனித பதில் தேவைப்பட்டது. "இதோ நானிருக்கிறேன்" என்னும் மரியாவின் வார்த்தைகளே அப்பதிலாக அமைகின்றன.

இது ஒரு வேலைக்கார மனநிலையில் கொடுக்கப்பட்ட சம்மதம் (ஒப்புதல்) அல்ல. மாறாக, முழுமையாக நம்பும் ஓர் இதயம் மகிழ்ச்சியோடும், செயலாற்றும் ஆர்வத்தோடும் ஏற்றுக்கொள்வதாகும். இது அன்போடும் முழு சுதந்திரத்தோடும் நடந்த ஒரு செயலாகும். இங்கே கடவுளின் திட்டத்திற்கு மரியா அடிப்பணியவில்லை. மாறாக, கடவுளின் திட்டத்தை விரும்பி ஏற்று, அதனைத் தனதாக மாற்றிக்கொள்கிறார்.

கடவுளின் செயல்பாடுகளுக்குக் கதவுகளைத் திறந்துவிடும் திறவுகோலாக திகழும் இத்தீவிரமான "ஆகட்டும்" என்னும் பதிலானது, திருவிவிலியம் முழுவதும் ஆழமாக வேரூன்றியுள்ளது. நம்பிக்கையோடு கூடிய அனைத்து பதிலிறுப்புகளுக்கும் இதுவே ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

## 5) பெர்னதெத்தின் விருப்பம்

"என்னை மாட்சிப்படுத்த, வருவிருக்கும் பதினைந்து நாள்களுக்கு இங்கு வருவாயா?" என்னும் மரியாவின் அழைப்பிற்கு, "ஆம்" என்று சொன்ன பெர்னதெத்தின் பதில் வெறும் வார்த்தையல்ல. அது ஓர் உறுதியான அர்ப்பணிப்பு. இது அன்றாட வாழ்வின் எதார்த்தத்தில் வாழ்வாக்கப்பட்ட மரியாவுடைய "ஆகட்டும்" என்ற பதிலின் நிறைவான எதிரொலியாகும். "இதோ, வருகிறேன்" என்ற அவருடைய பதில் இரண்டு முக்கிய அம்சங்களை வெளிப்படுத்துகின்றது:

- ***நிலையான உண்மைத்தன்மை (பிரமாணிக்கம்):*** பயம் மற்றும் அழுத்தம் இருந்தாலும், தவறாமல் ஒவ்வொரு நாளும் அவர் குகைக்கு வந்தார். அவரது கீழ்படிதல் முழுமையான நம்பிக்கையின் செயலாகும்.
- ***முழுமையான நம்பிக்கை:*** நிலத்தைத் தோண்டுதல், சகதியான (அசுத்தமான) நீரைக் குடித்தல் போன்ற நியாயமற்ற (பொருத்தமற்ற) செயல்களை அவர் மிகவும் எளிமையோடு செய்கிறார். இச்செயலானது, மரியாவின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையானது, நகைப்புள்ளாக நேரிடும் என்னும் பயத்தைக் காட்டிலும் வலிமையாக இருந்ததைக் காட்டுகிறது.

பெர்னதெத்தின் எடுத்துக்காட்டானது, கடவுளுக்கு நாம் சொல்லும் "ஆம்" என்னும் பதில், வார்த்தைகளைக் காட்டிலும் அன்றாட செயல்களால் அதிகம் வாழ்வாக்கப்பட வேண்டும் என்பதை நமக்குக் கற்றுத் தருகிறது. நம்மால் அனைத்தையும் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், "திரும்பி வரவேண்டும்" என்பதுதான் நமது தேர்வாக அமைய வேண்டும் என்று எடுத்துரைக்கின்றது. இவ்வாறு, நம்பிக்கையோடு நம்மை அர்ப்பணிக்கையில், ஒரு சுமையை அல்ல, மாறாக, உள்ளார்ந்த அமைதியின் ஊற்றை என்பதை நாம் கண்டறிவோம்.

# முடிவுரை

## "இதோ, நான் வருகிறேன்" - இதயப்பூர்வமான அர்ப்பணம்

குருக்கள் முதல் விரும்போம்புதலில் ஈடுபடும் உறுப்பினர்கள்வரை, திருப்பயணமானது, "இதோ, நான் வருகின்றேன்" என்னும் இயக்கங்களால் சுவையூட்டப்படுகிறது. அவை வெறுமனே வார்த்தைகள் அல்ல. மாறாக, கடவுளின் அருளில் நம்பிக்கை வைத்து, உடனிருக்கவும் பணிவிடை புரியவும் இதயப்பூர்வமாகக் கொடுக்கப்படும் வாக்குறுதியாகும்.

## இதயம் - உண்மையான சாகசத்திற்குரிய இடம்

திருத்தந்தை பிரான்சிஸ் ஓர் அடிப்படை உண்மையை நமக்கு நினைவூட்டுகிறார்: "அறிவை முதன்மைப்படுத்தும் இவ்வுலகில், உண்மையான சாகசத்தை இதயத்தில் கண்டறிய வேண்டும்." ஏனெனில், இதயத்தில்தான் நமது வாழ்வு ஒற்றுமையையும் அர்த்தத்தையும் கண்டறிகிறது. அங்குதான் நாம் அன்பு செய்யக் கற்றுக்கொள்கிறோம். அங்குதான் நமக்கு உண்மையாகவே எது தேவை என்பதை தீர்மானிக்கிறோம்.

## பெர்னதெத்தின் சுருக்கம்: "அன்பே போதுமானது"

இந்த சாகசத்தைப் புரிவதற்கானத் திறவுகோலை புனித பெர்னதெத் நமக்கு வழங்குகிறார்: "அன்பே போதுமானது." இது மேலோட்டமான ஒரு வாக்கியம் அல்ல. மாறாக, இது அருளினால் நிரம்பி வழியும் இதயத்திலிருந்து வரும் இறுதி (தீர்க்கமான) உண்மையாகும். இறைவேண்டல், மனமாற்றம் மற்றும் பிறருக்குப் பணிபுரிதலின் உண்மையான பொருளை (அர்த்தத்தை) அன்பே வழங்குகிறது.

## இறுதி அழைப்பு – ஓர் உள்ளார்ந்த திருப்பயணம்

**நமது இதயங்களுக்குள் மீண்டும் நுழைவதே உண்மையான லூர்து திருப்பயணம் ஆகும். இப்பயணம், கடவுளின் அன்பு நம் மூலமாக காணத்தக்கதாக மாற, தயார் நிலையில் இருக்க, மரியாவை அழைத்தது போல், நம்மையும் அழைக்கிறது. நமது எளிமையான செய்கைகளின் நம்பகத்தன்மையில் செயல்படுவதன் (உண்மைத்தனத்தில்) வாயிலாகவே, அருள் இவ்வுலகை மாற்றுகிறது.**

**அருள்திரு. கியுசெப் செரிகெலி, ஊீ**

**அருள்திரு. நிக்கோலா வென்றிக்கிலியா, முஆஐ (அமதி)**